**தூய சக்தி மற்றும் வலைப்பின்னல் வினைத்திறன் முன்னேற்ற செயற்திட்டம் - 2015**

---

தூய சக்தி மற்றும் வலைப்பின்னல் வினைத்திறன் முன்னேற்ற செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடீபீ) இலங்கை மின்சார சபைக்கும் (சீஈபீ) இடையே 2013 மே 08 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட 2892 எஸ்ஆர்ஜ (எஸ்எப்) ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கை மற்றும் 0303 - எஸ்ஆர்ஜ(ஈஎவ்) ஆம் இலக்க மானிய உடன்படிக்கை ஆகியவற்றின் 2.09(அ)ii ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலம் என்பன

செயற்திட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளது. இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் பகுதி 01 முதல் 06 வரையான பகுதிகளை அமுலாக்குவதற்கு பொறுப்பாக உள்ள அதேவேளை நிலைபேறான எரிசக்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் பகுதி 07 இனை அமுல்படுத்துவதற்கு பொறுப்பாக உள்ளது. செயற்திட்டத்தின் பகுதி 01 முதல் 06 வரையான பகுதிகளின் கீழ் இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மீதான அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுகின்றன. தூய மின்சக்தி வழங்கலை அதிகரித்தல் மற்றும் இலங்கையில் மின்சாரத்தை விநியோகிப்பதில் வினைத்திறனையும் நம்பகத்தன்மையினையும் முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன.

செயற்திட்ட நிர்வாக கையேட்டின் படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 25,240 மில்லியனுக்குச் சமனான யூஎஸ்டொ. 200 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 16,595.30 மில்லியன் அல்லது 66 சதவீதத்திற்குச் சமனான யூஎஸ்டொ. 131.50 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டது.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல்

அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப் பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் உதவி வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் செயற்திட்ட மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்,

(உ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) செயற்திட்ட மற்றும் மானிய உடன்படிக்கைகளில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து இதுவரை தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதிகள் ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) செயற்திட்ட மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக மீளளிப்புக்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமாக அமைந்திருந்தன என நம்பகரமாக திருப்திப்பட முடியும் என்றும்,

(ஈ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) செயற்திட்ட மற்றும் மானிய உடன்படிக்கைகளில் முன்வைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதிலான தாமதங்கள்

2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய எம்ஔஎவ்பி/ஈஆர்டீ/2007/02 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள், 2016 யூன் 24 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) பாதுக்க மற்றும் பொல்பிடிய உபமின் நிலையங்களை நிர்மாணிப்பதற்காக 02 காணித் துண்டுகளை கையேற்பதற்கு ஹோமாகம மற்றும் அம்பகமுவ கோரளை பிரதேச செயலகங்களில் வைக்கப்பட்டிருந்த ரூபா 25.44 மில்லியன் கூட்டுத்தொகையான வைப்புக்களை முற்பணங்களின் கீழ் காண்பிக்காது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட ரூபா 3.29 மில்லியன் நில அளவைக் கிரயம் மூலதனமாக்கப்படுவதற்குப் பதிலாக நானாவிதச் செலவினம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை மூலதனமாக்குதல் தொடர்பில் செயற்திட்டம் வேறுபட்ட கணக்கீட்டு முறைகளை பிரயோகித்திருந்தது. அதன் காரணமாக, செயற்திட்டத்தினால் ரூபா 294.67 மில்லியன் கிரயத்தில் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டு ஒப்பந்த காரர்களின் பெயர்களில் பதிவு செய்யப்பட்டிருந்த 37 மோட்டார் வாகனங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த அதேவேளை ரூபா 15.71 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த மற்றுமோர் மோட்டார் வாகனம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கிணக்கம் செய்யப்படாத மீதிகள்

வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பதிவேடுகளின் படி, 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்தப்பட்ட தொகை ரூபா 1983.50 மில்லியனாக காணப்பட்டதுடன் அது மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,954.40 மில்லியன் மீதியுடன் இணங்கியிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2015 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | மானிய / கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற் கான மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். |
| ஏடீபீ | 131.50 | 16,595.30 | 7,200.00 | 12.12 | 1,741.70 | 13.00 | 1,954.40 |
| ஜீஓஎஸ்எல் | 68.50 | 8,644.70 | - | - | - | - | - |
| சீசுபீ | - | - | 2,958.00 | 3.41 | 490.00 | 5.00 | 759.00 |
| மொத்தம் | 200.00 | 25,240.00 | 10,158.00 | 15.53 | 2,231.70 | 18.00 | 2,713.40 |

மேற்படி தகவல்களின் படி, கடன் மற்றும் மானியத்திலிருந்து கிடைத்திருந்த ஐ.அ.டொ. 131.50 மில்லியன் தொகையில் ஐ.அ.டொ. 13 மில்லியன் தொகையை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒதுக்கீட்டில் 11.8 சதவீத தொகை மாத்திரம் செயற்திட்டக் காலத்தில் 75 சதவீதம் முடிவுற்ற பின்னர் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

கணக்காய்விற்குக் கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, செயற்திட்டத்தின் பௌதீகச் செயற்பாடுகள் கீழே விபரிக்கப்பட்டவாறு 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடி மெதுவான செயன்முன்னேற்றத்தைக் காண்பித்தன.

(அ) மன்னார் மின் பரிமாற்று மேம்படுத்தல்களின் கீழ் மேற்கொள்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்த வவுனியா மற்றும் மன்னார் உபமின் நிலையங்களின் சிவில் நிர்மாண வேலைகளும் அநுராதபுரத்திலிருந்து வவுனியா மற்றும் மன்னார் வரைக்குமான மின்பரிமாற்றினை அபிவிருத்தி செய்தலும் வேலைகளின் பரப்பெல்லையின் மாற்றங்கள் மற்றும் வீதியின் இரு பக்கங்களிலுமுள்ள பொது மக்களின் எதிர்ப்புக்கள் காரணமாக மந்தமான செயன்முன்னேற்றத்தை காண்பித்திருந்தன.

(ஆ) பாதுக்க மற்றும் கேகாலை மின்சார பரிமாற்ற வழியினதும் புதிய பொல்பிடிய மின்சார பரிமாற்ற வழியினதும் அபிவிருத்தி வேலைகளின் கீழான சிவில் நிர்மாண வேலைகளின் ஒப்பந்தங்கள் தாமதங்களுடன் கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதன் விளைவாக, அவற்றின் சிவில் நிர்மாண வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்ப படிமுறையில் காணப்பட்டன.